**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் - 02 ( அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் எரிசக்தி சேமிப்பு செயற்திட்டம் ) - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு - ஏஜென்சி பிரான்கைசி டி டெவலொப்மென்ட் கடன் வசதி உடன்படிக்கை இல. சிஎல்கே 1008-01 பி - 2024**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 (அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் எரிசக்தி சேமிப்பு செயற்திட்டம்) இன் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்சி பிரான்கைசி டி டெவலொப்மென்ட்டிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008-01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2 (எச்) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) மேற்கொள்ளப்பட்டது. ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீட்டுத்திட்ட அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பழுதடைந்த குழாய் வலையமைப்பு மற்றும் உபகரணங்களை மேம்படுத்தி மாற்றியமைப்பதன் மூலம் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு நீர் வழங்கல் முறைமையின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதே இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஏஜென்சி பிரான்கைசி டி டெவலொப்மென்டால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2024 டிசெம்பர் 31 வரை நான்கு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான

அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டம் இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு / கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பந்தி 39(அ) இன் படி, செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய ரூபா. 1,253 மில்லியன் மதிப்புள்ள சமநிலை சரிசெய்தல்கள் மீளாய்வு ஆண்டின் நிதி கூற்றக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 1,253 | இந்தத் செயற்திட்டம் 2025 ஆம் ஆண்டில் நிதி கூற்றக்களில் ஒரு வெளிப்படுத்தலை உள்ளடக்கும். | ஏல்கேஏஎஸ் ஐப் பின்பற்றுங்கள். |
| (ஆ) | அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் ரூபா. 37.31 மில்லியன் செலவில் கட்டப்பட்ட மூன்று மாடி கட்டிடம் 2024 பிப்ரவரி 01 அன்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் படி அது மூலதனமாக்கப்படவில்லை. இதன் விளைவாக, நிலையான | 37.31 | இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டுக்குள் மூன்று மாடி விடுதிக் கட்டிடத்தை மூலதனமாக்கும். | ஏல்கேஏஎஸ் ஐப் பின்பற்றுங்கள். |

சொத்துக்களின் மதிப்பு இதே அளவு குறைத்து காட்டப்பட்டது.

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி இல 507(1),756 | 2024 டிசம்பர் 31 இல் சொத்துக்கள் சரிபார்ப்பு செய்யப்படவில்லை. | இச் செயற்திட்டத்தின் சொத்து சரிபார்ப்பானது 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும். | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம் 2014 செப்தெம்பர் 29 இல் அதனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலப்பகுதியினுள் இலக்கை அடைந்துகொள்ளத் தவறியதன் காரணமாக, செயற்திட்டத்தின் காலப்பகுதி 04 முறை திசெம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கிய திகதியிலிருந்து 10 ஆண்டுகளை கடந்த பின்னரும் முறையே 91.46 சதவீதம் மற்றும் 83.02 சதவீதமாக இருந்தது, எனினும், மீளாய்வாண்டில் இச் செயற்திட்டம் 9.54 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளதுடன் செயற்திட்டத்தின் கூறுகள் வாரியான முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| செயற்பாடு | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் (%) | அடைந்து கொள்ளப்பட்ட இலக்குகள் (%) | | | |
| **அம்பத்தலே உற்பத்தி வசதிகளின் நம்பகத்தன்மை மேம்பாடு மற்றும் எரிசக்தி சேமிப்பு**, பொருத்தமான திறன்களைக் கொண்ட திறமையான பம்புகளை நிறுவுவதன் மூலம் எரிசக்தியைச் | 100 | 82.07 | உரிய திகதிக்கு முன்னர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான இடர். | இந்த ஒப்பந்தம் ஆரம்பத்தில் பல்வேறு கட்டுப்பாடற்ற காரணங்களால் தாமதமானது, இது ஜூன் 30, 2026 க்குள் முழுமையாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | மேலதிக கிரயத்தை தவிர்க்கும் பொருட்டு மிகுதிப் பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பது, குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் ஏனைய உற்பத்தி வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் பரிமாற்ற இழப்புக்களைக் குறைத்தல். | | |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 36 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு 2015 இல் ரூபா 343 மில்லியனக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், ஏழு நீட்டிப்புகள் மூலம் இக்காலம் 67 மாதங்களைத் தாண்டியுள்ளது. ஜூலை 09, 2025 இல் உள்ளபடி, அதன் கிரயம் ரூபா. 768 மில்லியனைத் தாண்டியுள்ளது, இது ஆரம்ப பட்ஜெட்டை விட இரண்டு மடங்கு அதிகம், மேலும் சேவை முறையான அங்கீகாரம் இல்லாமல் தொடர்கிறது. முகாமை இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டது, அதற்குப் பதிலாக தொடர்ச்சியான கால நீட்டிப்புகளை வழங்கி மேலதிக கொடுப்பனவுகளை அங்கீகரித்துள்ளது. | இச்செயற்திட்டம் ஜூன் 30, 2026 க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் ஏஎப்டி இச் ளசெயற்திட்டம் முடியும் வரை ஆலோசனை ஒப்பந்தத்தைத் தொடருமாறு அறிவித்துள்ளது. | எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய செயற்திட்டத்தின் முகாமை வேலைகளை நெருக்கமாகக் கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | கொத்தடுவ 15,000 கன மீட்டர் நீர்த்தேக்கங்கள் மற்றும் பூஸ்டர் பம்பி நிலையம் மற்றும் 05 கிமீ டிஐ குழாய்களை ஆகியவற்றின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2022 யூன் 06 அளவில் பூர்த்தி செய்யப்படவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர், அது 2025 பெப்ரவரி 28 வரை எட்டு தடவைகள் நீட்டிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 98.07 சதவீதம் மற்றும் 96.61 சதவீதமாக இருந்தது. இருப்பினும், செயற்திட்ட முன்னேற்றம் மெதுவான வேகத்தைக் காட்டுகிறது. | கையேற்பு சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களுக்குள், குறைபாடு பட்டியலில் மீதமுள்ள பணிகள் முடிக்கப்படும். | செயற்திட்டத்தை திட்டமிட்டபடி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மொத்த செயற்திட்டத்தில் சுமார் 45% | செயற்திட்ட | செயற்திட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிக்கும் ஜசிபி 05 ஒப்பந்தம், அம்பத்தலே உற்பத்தி வசதிகளில் ஆற்றல் திறன் கொண்ட பம்புகளை நிறுவுவதற்காக தொடங்கப்பட்டது, இதன் நிறைவு திகதி 2020 டிசம்பர் 31, ஆகும். இருப்பினும், ஒப்பந்த காலம் ஆறு முறை நீட்டிக்கப்பட்டுள்ளது, சமீபத்திய காலக்கெடு 2024 டிசம்பர் 31 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2025 மே 31, உள்ளபடி, திட்டம் 85% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது, இருப்பினும் 62% நிதி முன்னேற்றம் மட்டுமே அறிக்கையிடப்பட்டுள்ளது. செயற்திட்டம் தொடர்ந்து அதன் இலக்குகளை அடையத் தவறி வருவதாகவும், முறையான கால நீட்டிப்பு இல்லாமல் செயல்பட்டு வருவதாகவும் செயற்திட்ட ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. | முகாமைத்துவம் கூடுதல் செலவு இல்லாமல் கால நீட்டிப்பை வழங்க முடிவு செய்துள்ளது. அதன்படி, ஜசிபி 05 கடைசி ஈஓரி 2025 செப்டம்பர் 30, வரை செல்லுபடியாகும். இது 2025 ஜூன் 30, க்குள் ஒப்பந்தத்தை முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | திட்டமிட்டபடி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஐடிஏச் மருத்துவமனை வளாகத்தில் ஊழியர் குடியிருப்பு கட்டிடத்தின் கட்டுமான செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் 2019 நவம்பர் 14, அன்று ஒரு தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு ரூபா. 91.65 மில்லியன் மதிப்பில் வழங்கப்பட்டது, இது 365 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். கட்டுமான நோக்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து, ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த நாளிலிருந்து 490 நாட்களுக்குப் பிறகு, அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மூன்று மாடி இரண்டு அலகுகள் கொண்ட கட்டிடங்களை திருத்தப்பட்ட ஒப்பந்தத்திற்காக ரூபா. 117 மில்லியன் மதிப்பில் கட்ட முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், நான்கு கால நீட்டிப்புகள் மற்றும் 864 நாட்களுக்குப் பிறகும், ஒப்பந்தப் பணிகளில் 28 சதவீதம் எஞ்சியிருந்தது, மேலும் ஒப்பந்தப் பணிகள் 2024 டிசம்பர் 09, அன்று பரஸ்பரம் நிறுத்தப்பட்டன. மீதமுள்ள பணிகள் தனி ஒப்பந்தத்தின் கீழ் முடிக்கப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.<br>இதற்கிடையில், செயற்திட்டமானது மொத்த ஒப்பந்த மதிப்பு மற்றும் விலை மாறுபாடுகள் உட்பட ரூபா. 131 மில்லியன் செலுத்தியுள்ளது. | நோக்கம் மாற்றத்திற்கான கையொப்பமிடப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில், புதிய ஒப்பந்தத் தொகை ரூபா. 117,310,181 ஆக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் வெற்றி - வெற்றி தீர்வாக பரஸ்பரம் நிறுத்தப்பட்டபோது, மொத்த சான்றளிக்கப்பட்ட செயற்திட்டச் செலவு ரூபா. 131 மில்லியனாகவும், நிதிக் கட்டணங்களைத் தவிர்த்து ரூபா. 128.77 மில்லியனாகவும் செலுத்தப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட விலை அதிகரிப்பு காரணமாக ஒப்பந்தத் தொகை அதிகமாக இருந்தது. மீதமுள்ள பணிகளுக்கான மேற்கோள்கள் பொறியாளர் மதிப்பீட்டோடு ஒப்பிடப்பட்டு, ஒப்பந்தத்தை வழங்குவதற்கு மிகக் குறைந்த அளவு தேர்ந்தெடுக்கப்பட்டது.<br><br>இந்த ஊழியர் | பெறுகை வழிகாட்டுதல்களை மீறிய பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதமுள்ள பணிகளை முடிக்க, பெறுகை வழிகாட்டுதல்களின் பிரிவு 4.3 இன் படி எந்த மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. திறந்த போட்டி கேள்வி நடைமுறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஜசிபி 05 ஒப்பந்ததாரரிடமிருந்து சபை முறைசாரா முறையில் மூன்று விலைமனுக்களை பெற்றது. செயற்திட்ட இயக்குநரால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்காக, ஒப்பந்தம் அதே வெற்றிபெறாத ஒப்பந்ததாரருக்கு ரூபா. 45.43 மில்லியனுக்கு வழங்கப்பட்டது.<br><br>மேலும், இந்த ஒப்பந்தத்திற்கான மொத்த செலவு ரூபா. 193 மில்லியனாக அதிகரித்துள்ளதாகவும், இது முல ஒப்பந்தத்துடன் ஒப்பிடும்போது அண்ணளவாக 110 சதவீதம் அதிகமாகும் என்றும் அவதானிக்கப்பட்டது. | குடியிருப்புகளின் பயனாளிகளின் பயன்பாட்டைப் பெற, குறுகிய காலத்தில் மீதமுள்ள பகுதியை முடிப்பது ஒரு முக்கியமான காரணியாக மாறியது. முறையான துணை ஒப்பந்ததாரர் தேர்வு நடைமுறையைப் பின்பற்றிய பிறகு, மீதமுள்ள பணி அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. | |
| (உ) | நீர் சுத்திகரிப்புக்குப் பிறகு, பெரும் செலவில், ஒரு நாளைக்கு அண்ணளவாக 19,643 கன மீட்டா பின் கழுவும் நீர் ஆற்றில் மீண்டும் விடப்படுகிறது. அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு கன மீட்டர் தண்ணீருக்கு உற்பத்தி செலவு அண்ணளவாக ரூபா. 9.59 என்று திட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அமைப்புகளின் கட்டுமானத்தில் ஏற்பட்ட தாமதத்தைக் கருத்தில் கொண்டு, ஏற்பட்ட பொருளாதார இழப்பு அண்ணளவாக ரூபா. 231 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இரசாயனத்தில் நீர் சுத்திகரிப்புக்குப் பிறகு மீதமுள்ள சேறு உள்ளது, இது ஒரு கால்வாய் அமைப்பு வழியாக முறைசாரா முறையில் நீர் ஆதாரத்தில் வெளியேற்றப்படுகிறது, இது சுற்றுச்சூழலுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. | இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கவே பக் வோஸ் நீக்கவரி சிஸ்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்த அமைப்பின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கட்டுமானம் முடிந்து அதன் செயல்பாட்டைத் தொடங்கிய பிறகு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். | ஒப்பந்தத்தை திட்டமிட்டபடி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் பொறுப்பான தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | எலிஹவுஸ் நீர்த்தேக்கத்திற்கு அதிக அழுத்தத்தில் தண்ணீரை வழங்குவதற்காக எலிஹவுஸ் பம்ப் ஹவுஸ் கட்டுமானத்திற்கான | இது ஒப்பந்த முன்னேற்றத்தை மேலும் தாமதப்படுத்தாது, மேலும் நிலத்தடி நீர்த்தேக்கத்தில் | மேலும் தாமதமின்றி செயற்திட்டத்தை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஒப்பந்தத்தில் (ஜசிபி 05), நான்கு பம்புகள் நிறுவப்பட்டன. இருப்பினும், கணக்காய்வு திகதியான 2025 ஜூலை 09, வரை, 9 கி.மீ பிரதான டிரான்ஸ்மிஷன் பைப்லைன் இணைக்கப்படவில்லை. செப்டம்பர் 2024 இன் ஏஎப்டி மிஷன் அறிக்கை, ஜசிபி 05 குழாய் சப்ளையரால் வழங்கப்பட்ட Y- வடிவ T- குழாய்களில் உற்பத்தி குறைபாடு இருந்ததை வெளிப்படுத்தியது. இந்தக் குறைபாட்டைக் கண்டறிந்து ஒன்பது மாதங்கள் கடந்த போதிலும், திட்ட நிர்வாகம் அந்தப் பிரச்சினைகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. | மீதமுள்ள பணிகளை டிசம்பர் 2025 இறுதிக்குள் முடிக்க முடியும். |

## 3.3 தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| தரை நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதன் மூலம் அதிக எரிசக்தி வினைத்திறன்களை அடைந்துகொள்வதையும் உராய்வினால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு பெரிய விட்டம் கொண்ட பழுதடைந்த குழாய் வலையமைப்பை மாற்றியமைப்பதையும் இலக்காகக் கொண்டு பழைய மற்றும் பயனற்ற எரிசக்தி உற்பத்தித்திறன் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலான பம்பிகளை மாற்றியமைப்பதற்கு என்டபிளயூஉஸ்டிபி முடிவு செய்திருந்தது,<br>கணக்காய்வு திகதி வரை 17 புதிய பம்புகளில் 9 மட்டுமே செயல்பாட்டில் இருந்தன. கோதட்டுவா பம்ப் ஹவுஸில் உள்ள நான்கு பம்புகள் நிறுவல் நிறுவப்படாமல் இருந்தன, அதே நேரத்தில் எலிஹவுஸ் பம்ப் ஹவுஸில் உள்ள நான்கு பம்புகள் நிறுவப்பட்டிருந்தாலும், 1,200 மிமீ டிரான்ஸ்மிஷன் பைப்லைன் இணைப்பு சிக்கல் காரணமாக சேவையில் இல்லை. மேலும் 16 இல் 11 ஓட்ட மானி, 11 இல் 6 சர்ஜ் வெசல்ஸ் முறைமை மாத்திரமே நிறுவப்பட்டிருந்தன. மற்றும் எஸ்சிஏடிஏ அமைப்பு செயல்படுத்தப்படவில்லை, இதனால் திட்டத்தின் ஆற்றல் சேமிப்பு நோக்கங்கள் சமரசம் செய்யப்பட்டன. | திட்டமிட்டபடி எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படவில்லை. இந்த கட்டத்தில், ஆற்றல் சேமிப்புக்கான திட்ட வெளியீட்டைக் கவனிக்க முடியாது, ஆனால் முடிந்ததும், திட்டத்தின் ஆற்றல் சேமிப்பைச் சரிபார்க்க ஆற்றல் கணக்காய்வு செய்யப்படும். | பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்யத் தவறிய செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு செய்யாததற்கான காரணத்தைக் கண்டறிவதற்கு விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற / பயன்படுத்தப்படாத / குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மோசமான செயற்திட்ட முன்னேற்றம் காரணமாக, 2024 டிசம்பர் 31, அன்று மொத்த கடன் வசதியில் 60 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கடன் வழங்கும் நிறுவனம் கடன் வழங்குவதை நிறுத்தியது, இதன் விளைவாக, அரசாங்கம் மொத்தமாக ரூபா. 390.4 மில்லியன் தொகையை பொருளாதாரப் பயனற்று ஈடுபாடடுக் கட்டணமாக செலுத்த வேண்டியிருந்தது | பொருளாதார நெருக்கடி காரணமாக நிதி வழங்குவதை ஏஎப்டி நிறுத்தியது. ஏஎப்டி யின் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சரவையின் அங்கீகரிக்காரத்துடன் முன் நிதி ஒப்பந்தத்தின் கீழ் திறைசேரி நிதிகளுடன் இந்த திட்டம் தொடர்கிறது. கடைசி ஏஎப்டி பணி மொத்த கடன் நிலுவைத் தொகையை வழங்குவதாக உறுதிசெய்து, அதுவரை தொடர்ந்து திறைசேரி நிதியைக் கோரியது. | செேயற்திட்ட நிதியை விளைதிறனாக பயன்படுத்த வேண்டும். |

### 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 31.12.2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதி கொடுக்கல்வாங்கல் இன்று வரை உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. | சுற்றுநிருப வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும். |